Enable | Enlighten | Enrich
[Deemed to be University]
(Under Section 3 of UGC Act 1956)

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

(கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

கோயம்புத்தூர் - 641 021.

## தமிழில் பிற துறைகள்
## பன்னாட்டுக் கருத்தரங்கம்

21 நவம்பர் 2015, சனிக்கிழமை

தமிழ்த்துறை

Scanned by CamScanner

## நூல் பற்றிய விவரங்கள்

# தமிழில் பிற துறைகள்

| | |
|---|---|
| பொருள் | : தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் |
| மொழி | : தமிழ் / ஆங்கிலம் |
| நூல்அளவு | : டெமி 1/4, புள்ளி 11 |
| படிகள் | : 150 |
| பக்கங்கள் | : 400 |
| முதற்பதிப்பு | : நவம்பர் 2015 |
| விலை | : 400/- |
| அச்சு | : ஏசியன் அச்சகம், சுந்தராபுரம், கோவை. |
| வெளியீடு/ உரிமை | : தமிழ்த்துறை<br>கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்<br>கோவை – 21 |
| ஐ.எஸ்.பி.என். எண் | : 978 - 81 – 928302 – 3 – 0 |

## BIBLIOGRAPHICAL DATA

# TAMIZHIL PIRA THURAIGAL

| | |
|---|---|
| Subject | : Tamil Research Articles |
| Language | : Tamil |
| Book size | : 1/8 |
| Pages | : 400 |
| First edition | : November,2015 |
| Price | : 400/- |
| Printing | : Asian achagam<br>Sundrapuram,covai. |
| Publication/Rights | : Dept of tamil,<br>Karpagam Academy of Higher Education,<br>Coimbatore-641021. |
| ISBN Number | : h978-81-928302-3-0 |


Scanned by CamScanner

| | | |
|---|---|---|
| 98. | புறநானூற்றில் அறச்சிந்தனைகள் - முனைவர் சு.பாஸ்கர் | 284 |
| 99. | பழந்தமிழ் இலக்கியங்களில் பறவைகள் - டி.குமாரன் | 286 |
| 100. | சங்க இலக்கியத்தில் வழிபாடுகள் - பா.அருள்ஜோதி | 289 |
| 101. | சங்க இலக்கியங்கள் உணர்த்தும் சுற்றுச்சூழல் - முனைவர் க.தனலட்சுமி | 292 |
| 102. | தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் - மு.ஜமுனா | 294 |
| 103. | பெண்ணியத் திறனாய்வு - முனைவர் அ.ஸ்ரீதேவி ராமலிங்கம் | 295 |
| 104. | பாரதக் கதையில் கர்ணன் - முனைவர் அ.பிரசில்லா | 297 |
| 105. | பழந்தமிழ் இலக்கியத்தில் தலைமைப்பண்புகள் ப.கணேஷ் வடிவேல். | 301 |
| 106. | பாலக்காடு மாவட்டத் தமிழின மக்களிடையே வழக்கிலிருக்கும் நம்பிக்கைகள் ஒரு பார்வை - முனைவர் செ.ஆறுச்சாமி | 304 |
| 107. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு - ம.வடிவேல் [1] முனைவர் V.ஜெயபால்[2] | 309 |
| 108. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு ம.வடிவேல்[1] முனைவர் V.ஜெயபால்[2] | 313 |
| 109. | வள்ளுவத்தில் விலங்கியல் சிந்தனைகள் - முனைவர் க.லதா | 319 |
| 110. | பாவண்ணன் படைப்பில் தொன்மச் சிந்தனைகள் - க.ரேவதி | 321 |
| 111. | புறப்பொருள் வெண்பாமாலையில் நாட்டுப்புறவியல் கூறுகள் - முனைவர் சி.சொர்ணமாலா | 323 |
| 112. | காளமேகம், கம்பர் பாடல்களில் உணவியல் - திருமதி ச.அ.சுஜா | 325 |
| 113. | தமிழிசைப்பாடல் பரிபாடலில் இசைக்கூறுகள் - முனைவர் நா.ரேணுகா | 327 |
| 114. | தொகை நூல்களுள் உணவியல் கூறுகள் - முனைவர் இரா.பொன்னி | 330 |
| 115. | படைப்புகள் உணர்த்தும் படிப்பினைகள் - முனைவர் இரா.ஏஞ்சல் | 332 |
| 116. | உயிருக்குள் தாகத்தில் சமூகச் சிந்தனைகள் – நா.கிருஷ்ணராஜ் | 336 |
| 117. | நோய் தீர்க்கும் நட்சத்திர மரங்கள் - சித்திரை நட்சத்திரம் - வில்வமரம் இரா. புருஷோத்தமன்,. முனைவர் கணேசன்.ஆ, | 340 |
| 118. | வெள்ளெருக்கும் திருவோண நட்சத்திரமும் -புருஷோத்தமன்.இரா, முனைவர் கணேசன்.ஆ | 342 |
| 119. | கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் நாட்டுப்புறத் தொழில்சார் நுட்பங்கள் - முனைவர் பொ.சுதாராணி | 344 |
| 120. | தமிழில் கணிதம் - முனைவர் ப. கோமதி சுப்பிரமணியம் | 346 |
| 121. | சான்றோர்களின் படைப்பில் பெண்ணியம் - ச.தனலெட்சுமி | 348 |
| 122. | தீர்த்தங்களும் தெய்வ நம்பிக்கைகளும் மதுரைப்பகுதி ஓர் ஆய்வு - சி.மாணிக்கராஜ் | 352 |
| 123. | சிலம்பில்இனவரைவியல் - முனைவர் த.கவிதா | 356 |
| 124. | மதுரைக்காஞ்சி பகரும் திருவிழாக்கள் - மு.துர்க்கா | 359 |
| 125. | கவிஞர் செ.கனிமொழியின் கவித்திறம் - முனைவர் க.லட்சுமி | 361 |
| 126. | பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குழந்தை உளவியல் - க.மீனாட்சி, முனைவர் ப.தமிழரசி | 363 |
| 127. | தமிழர் பாதுகாப்பு அரண் – முனைவர் த. பாலமுருகன் | 367 |
| 128. | கவிஞர் கே. ரவியின் மின்னற்சுவை - முனைவர் ச.கவிதா | 370 |
| 129. | வள்ளுவர் மற்றும் பர்துருஹரியார் போற்றும் நட்பு – சீ.மாலதி, முனைவர் ச.கவிதா | 373 |


Scanned by CamScanner

முற்பிறவியில் ஒருவன் செய்த நல், தீவினைகள் அவனுடைய அடுத்த பிறவியில் பிரதிபலிக்கும் என்பது நம்பிக்கை. வள்ளுவரும்,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்' (குறள். 505)

என்றும் 'ஊழிற் பெருவலியாவுள', (குறள். 380) என்றும் கூறுகிறார். சிலப்பதிகாரமும் 'ஊழ்வினை வந்து உருத்தது ஆகலின்' (கானல்வரி, செய். 52) என்று ஊழின் வலிமையைக் காட்டுகின்றது. புறப்பொருள் வெண்பாமாலையும், எல்லா வகையிலும் சிறந்த ஒருத்தி மனைவியாக அமைந்ததற்குக் காரணம் ஊழாகிய தெய்வமே எனத்தலைவன் எண்ணி அதற்குரிய தெய்வத்தை வாழ்த்துவதாகக் கூறுகின்றது. ஊழ் என்பது இன்று 'விதி' 'தலைவிதி', 'தலையெழுத்து' என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இச்செய்திகள், பண்டைய மக்களின் வாழ்வியலோடு அசைக்கமுடியாத நம்பிக்கையாக 'ஊழ்' இருந்தமையைப் புலப்படுத்துகின்றன.

**நிலையாமை குறித்த நம்பிக்கை**

கண்ணுக்குத் தெரியும் அனைத்துப் பொருள்களும் நிலையற்றவை என்பது முன்னோரின் நம்பிக்கை. மணிமேகலை, குண்டலகேசி, சீவகசிந்தாமணி உள்ளிட்ட காப்பியங்களும் இளமை, யாக்கை, செல்வம் யாவும் நிலையற்றவை என்கின்றன. புறப்பொருள் வெண்பாமாலை 'பெருங்காஞ்சி' என்னும் துறையில், 'மலை ஓங்கிய மாநிலத்து நிலையாமை நெறி உரைத்தன்று' (பொதுவியல் படலம்) என்கிறது. காஞ்சி என்பதே நிலையாமையை உணர்த்தி வீடுபேறடையச் செய்யும் தன்மையுடையது. இதையே புறப்பொருள் வெண்பாமாலையும் முன்னிறுத்துகின்றது.

**முடிவுகள்**

இறைவழிபாடு, நடுகல் வழிபாடு பேய், நிமித்தம், நல்ல நேரம் பார்த்தல், விரிச்சி கேட்டல் ஊழ்வினை, நிலையாமை போன்ற நாட்டுப்புறவியல் கூறுகள் புறப்பொருள் வெண்பாமாலையில் நிறைந்து காணப்படுகின்றன. இவை என்றும் மக்கள் வாழ்வில் நீங்கா இடம் பெற்றவை என்பது யாராலும் மறுக்க முடியாத மறக்க இயலாத உண்மை.

------------------------

## 112.காளமேகம்,கம்பர் பாடல்களில் உணவியல்

திருமதி ச.அ.சுஜா, உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, பாத்திமா கல்லூரி,மதுரை.

உணவேமருந்து என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். அவர்கள் உண்ட ஊட்டமிக்க உணவுதான் புறவாழ்விலும், அகவாழ்விலும் பண்டையோர் சிறந்து விளங்க அடிப்படையாக இருந்தது. இன்று தமிழரின் உணவு முறை கால மாற்றத்தால் கலாச்சார மாற்றத்தால் தலைகீழாகிப் போனது. தமிழர்களின் உணவாக இருந்த கம்பங்கூழ், வரகரிசிச் சோறு, கம்பு தோசை, தேன் கலந்த தினைமாவு கீழாவும், தாழ்வாகவும் பார்க்கப்படுகின்றன. இந்நிலை மாற வேண்டும். ஆரோக்கியமற்ற உணவும், அளவற்ற உணவும் இன்று நடைமுறைக்கு வந்துவிட்டன. இதைத் தவறு என்று அன்றே வள்ளுவர்,

*"அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு" ( கு:943 )* என்றும்
*"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றிஉணின்" (கு:42)*என்றும் கூறியுள்ளார்.

"அண்டம்சுருங்கில் அதற்கோர்அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பல உள"

என்று உணவைக் குறைத்து உண்டு உடம்பு சுருங்கினால் நன்மை உண்டு என்கிறார் திருமூலர். உணவை உண்ணும் முன் பகிர்ந்து உண்ண வேண்டும். காக்கை தன் இனத்தை அழைத்துக் கொடுப்பது போல நாமும் விருந்தினருக்குக் கொடுத்தப் பின் உண்ண வேண்டும். *"வந்தார்க்கு இலைபோட்டு வருவோருக்கு உலை வைக்கும் தமிழகம்"* என்ற கருத்துக்கள் நம் விருந்தோம்பல் பண்பைப் பறை சாற்றுவன.

"யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என்கிறார் திருமூலர்.

காரணம் அறிவுவிளக்கம் பெற்ற ஆன்மாவாக, உயிர் பக்குவம் பெற உடம்பு கருவியாகிறது. இன்றைய வாழ்க்கைக்கு உடல் நலம் பேணும் உணவு முறை மிகமிக அவசியம். உடலின் வளர்ச்சிக்கு உணவு அவசியமாகிறது.

"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்று திருமூலர் கூறியது போல், உடம்பில் உயிர் தங்க வேண்டுமெனில் உணவு உண்டுஉடம்பைவளர்க்கவேண்டும்.உடம்பைவளர்ப்பதிலும் ஒருமுறைஉண்டு. பண்டைத் தமிழர்எதைச் செய்தாலும் ஒருகணக்குடன் முறையுடன் செய்தனர். அதற்குள்அறிவினைத் தூண்டும் எண்களும் இருக்கும். எண்களுக்குள் எண்ணங்களும் இருக்கும்.எனவேதான்

**ஏழுவகைஅன்னங்கள்**

1. சுத்தான்னம் ( சோறு மட்டும் )
2. மத்வன்னம் ( தேன் கலந்த சோறு )
3. தத்யான்னம் ( தயிர் கலந்த சோறு )

Scanned by CamScanner